தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் மாணவர் நல இயக்குநரகம் சார்பாக ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டுக்கான வேலைவாய்ப்பு முகாம் 14.06.2016 மற்றும் 15.06.2016 ஆகிய இரு தினங்களில் பல்கலைக்கழக அண்ணா அரங்க வளாகத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் துவக்க விழாவான இன்று (14.06.2016) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். கு.ரா. அனந்தகுமார் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்துச் சிறப்புறையாற்றினார். அவர் தமது உரையில் அனைத்து நிறுவனங்களும் வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களைத் தேர்வு செய்வதற்காக வந்தமைக்குப் பாராட்டிப் பேசினார்.

வேளாண்மை சார்ந்த தனியார் நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் போன்ற அனைத்து தேசிய நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் பணிபுரிவதற்காகச் சிறப்புமிக்க பாடத்திட்டத்தினைக் கொண்டுள்ளதே இப்பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பு என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர் எஸ். மகிமைராஜா அவர்கள் பேசுகையில், 13 இளம் வேளாண் அறிவியல் பட்டமும், பாடத்திட்டமும் நடைமுறையில் செயல்படுகிறது என்றும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப வேளாண் கல்வி மாணவர்களுக்காக 19 தனியார் வேளாண் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இணைந்து செயல்பட்டு வருகின்றன என்றும் கூறினார். சென்ற ஆண்டைக் காட்டிலும் 24 சதவிகிதம் விண்ணப்பங்கள் இந்த ஆண்டு அதிகமாக பெறப்பட்டுள்ளது.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் நல இயக்குநர் முனைவர். நா. ரகுபதி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். மேலும் அவர் தமது வரவேற்புரையில் வேலைவாய்ப்பிற்காக வந்த மாணவர்களையும், வேளாண் சார்ந்த நிறுவனங்களையும் வரவேற்றுப் பேசினார்.

இந்த விழாவில் மொத்தம் 21 நிறுவனங்கள் பங்கு பெற்றன. கோவை மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த வேளாண் கல்லூரி மாணவர்கள் இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்